**டிசம்பர் 23**

## *புனித செர்வுலூஸ் (-590)*

இவர் பிச்சைக்காரன். குழந்தைப் பருவத்திலிருந்து ஒரு கொடிய நோய் இவரை உபாதித்து வந்தது. இவரால் நிற்கவும், நிமிர்ந்து உட்காரவும் முடியாது. கையை வாய்ப்பக்கம் உயர்த்தவும் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் திருப்பவும் முடியாது. உரோமையில் உள்ள புனித சாந்தப்பர் ஆலயத்தின் வாயிலில் உட்கார்ந்து பிச்சை எடுத்துக் கொண்டிருப்பார். ஒவ்வொரு நாளும் காலையில் இவருடைய தாயும் சகோதரனும் இவரை வீட்டிலிருந்து தூக்கிக் கொண்டு போய் கோவில் வாயிலில் வைப்பார்கள். இவர் தமக்குக் கிடைத்த பிச்சையில் மீதியை ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுப்பார். அனைத்தையும் சுத்தகருத்தோடு செய்வார். வந்த தாழ்மைகளையெல்லாம் தேவசித்தத்திற்குப் பணிந்து ஏற்றுக் கொண்டு தனது அர்ச்சிப்புக்காகவும் பாவிகள் மனந்திரும்பவும் கடவுளுக்கு ஒப்புக் கொடுப்பார்.

பக்தியுள்ளவர்கள் கோவிலுக்குப் போகும் போது அல்லது கோவிலிலிருந்து திரும்பும்போது வேத புத்தகத்தை தமக்குப் படித்துக் காட்டும்படி கெஞ்சிக் கேட்பார். மிகுந்த கவனத்துடன் செவிகொடுத்து, கேட்பதை மனப்பாடம் செய்து கொள்வார். இவர் இடைவிடாது வேதனைப்பட வேண்டியிருந்தாலும் கடவுளை வாழ்த்தி அவருக்கு நன்றி செலுத்தி கீதங்களைப் பாடுவார். 590-ஆம் ஆண்டையொட்டி இவர் இறந்தார்.

**சிந்தனை:**

எந்த நிலையில் இருந்தாலும் புனிதராகலாம். பிச்சைக்காரர்களும், நோயாளிகளும் தங்கள் துன்ப துயரங்களை பொறுமையுடன் சகித்து புனிதராகலாம்.

**செபம்:**

ஆண்டவரே, எங்களுக்கு வரும் துன்ப துயரங்களை நல்ல வழியில் பயன்படுத்தும் வரம் தாரும்.